# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

## ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

(தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் முதல் தர நிர்ணயம் பெற்றது)

பெரியகுளம் – 625601, தேனி மாவட்டம்.

முதுகலைத் தமிழ்த்துறை

தேசிய அளவிலான கருத்தரங்கம்

# இலக்கியத்தில் சமூகம்




டிசம்பர் – 2019

visit us: www.pallavipathippakam.in
https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

மலர் : 7 டிசம்பர் - 2019 இதழ் : 12

பதிப்பாசிரியர்

நல் நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை.
கல்யாண் சில்க்ஸ் எதிரில்.
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.U.Karuppathevan**
*Madurai Kamaraj University, Madurai.*
ukthevar@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை*
arangantnou@gmail.com

**முனைவர் உ.கருப்பத்தேவன்**
*மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை*
ukthevar@gmail.com

# கீரனூர் ஜாகிர்ராஜா படைப்புகளில் தமிழ் இஸ்லாமியர்களின் கல்வி நிலை

*சு.சத்யா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி.

**முன்னுரை**

தமிழில் இஸ்லாமியப் புனைவிலக்கியங்கள் தனிமனித வாழ்க்கையை மையமிட்டவையாகப் படைக்கப்பட்டுள்ளன. தமிழ் இஸ்லாமிய இலக்கியங்கள், அனைத்துத் தளங்களிலும் மிளிரும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. இன்றளவும் இஸ்லாமியர்கள் சமயம், வட்டாரம், தமிழ்ப் பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்தே தமது வாழ்க்கைச் சூழலைத் தகவமைத்துள்ளனர். இத்தகைய வரலாற்றுப் பின்னணிகொண்ட தமிழக இஸ்லாம் சமயம் குறித்தும் மரபார்ந்த நவீனத் தமிழ் இலக்கியத்தில் பற்பல நூல்கள் தோன்றியுள்ளன. அவை இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்று அறியப்படும் அளவிற்குத் தனித்த செல்வாக்குப் பெற்றுள்ளன. எனினும் அந்நூல்கள் பெரும்பான்மையும் இஸ்லாமிய சமயக் கருத்துகள், சமயப் பெரியோர்களின் பெருமைகள் ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. இவ்வாறு இருந்ததாலும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நவின ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்து மறுத்து வருகின்றனர். சமய மரபுகளைப் போதிக்கும் மதரஸாக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை மையமாகக் கொண்டு பெண் குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்படுகிறது. வறுமையின் காரணமாகச் சிறுவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்காமல் வெளிமாநிலங்களுக்கு வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். இந்நிலையில் இந்திய அரசும் இஸ்லாமியர்களுக்கு மிகுதியான அளவில் இடஒதுக்கீடு வழங்கவில்லை.

**தமிழ் இஸ்லாமியர்களின் கல்வி நிலை**

தமிழகத்தில் இஸ்லாமியச் சமூகம் மற்ற சமூகங்களைக் காட்டிலும் கல்வியில் ஒப்பீட்டளவில் பின்தங்கியுள்ளது. பிற சமூகங்களில் கல்விக்கு விதிக்கப்பட்ட தடையைக்காட்டிலும் இஸ்லாம் சமூகத்தில் கல்விக்கான தடை இறுக்கமானது. 'சீனம் சென்றாவது ஞானம் தேடு' என்று இஸ்லாம் சமூகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாம் சாதி, தீண்டாமை ஒழிப்பிற்கு கொடுத்த முன்னுரிமை கல்விக்குத் தரவில்லை. இத்தகைய சூழலில் இஸ்லாமியர்கள் பின்னடைவைச் சந்தித்தனர். மேலும் இஸ்லாமியர்கள் நவீனக்கல்வி விடயத்தில் மதம் சார்ந்த விவாதப்போக்கைக் கடைபிடித்தனர். இச்சூழலை,

> "பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீனக் கல்வி முறைக்குள் நுழைய முஸ்லிம் சமூகம் முயலவில்லை." (சித்திலெப்பை மரைக்காயர், 2010, ப.144)

என்று சித்திலெப்பை மரைக்காயர் அறிவுறுத்திய நவீனக்கல்விக்கு இஸ்லாமியர்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை. இஸ்லாமியர்கள் தமது சமூகத்திற்கு மதரஸாக் கல்வியே சிறந்தது என்று எண்ணி மற்ற அறிவுக்கல்வியைக் கற்க முன்வரவில்லை. கீரனூர் ஜாகிர்ராஜா சித்திரிக்கும் மொத்த அடித்தள இஸ்லாம் சமூகத்திற்கும் கல்வி இல்லை. ராவுத்தர், லெப்பை, மீன்காரர், உருது முஸ்லிம், பறையர், அருந்ததியர் ஆகிய பிரிவினர் எவரும் கல்வியில் பொருளாதாரக் குறைவின் காரணமாக மேம்படவில்லை. பள்ளிக்கல்வி கற்கும் வாய்ப்பு இருந்தபோதிலும் , சாதி, மதம், வறுமை முதலியவை முட்டுக்கட்டை போட்டன. மீன்காரச் சமூகம் இவற்றினால் பெரிதும் பாதிப்படைந்தது. உயர்த்தட்டு வர்க்கத்தினர், மார்க்கத்தை எடுத்துக்காட்டி நவீனக் கல்வியைத் தடை செய்தனர். நவீனக்கல்வி அல்லாவுக்கு எதிரானது என்று பரப்புரை செய்தனர். இஸ்லாமியப் பெண்கள் பூப்படைந்தவுடன் பள்ளிக்கு அனுப்பமுடியாத சூழலை,

> "ஓதிப்படுச்சு அந்தப் புள்ளயென்ன ஜில்லா கலெக்டராவா ஆயிருச்சு. அதும் கூடையைத் தூக்கிகிட்டு மீனுமீனுன்னு கூப்பாடு போட்டுகுட்டுத்தேங் அலையிது." (கீரனூர் ஜாகிர்ராஜா, 2013, ப.74)

என்று கீரனூர் ஜாகிர்ராஜா கல்விகற்ற ஆமினாவைப் பற்றி ஜைத்தூன் பேசுவதாக எடுத்துரைக்கிறார். இதன்வழி நவீனக்கல்விக்கு மறுப்பு முன்வைக்கப்படுகிறது. பெண்கள் மதறஸாக் கல்வியைக் கற்றாலும் எவ்விதப்பயனும் இல்லை என்று இஸ்லாமியர்கள் கருதுகின்றனர். கல்விகற்க முடியாத அளவுக்குப் பொருளாதாரச் சூழலும் அமைந்துள்ளது. பொருளாதாரத்தில் நிறைவடைந்தவர்கள் அடிப்படைவாதம் எனும் பேரில் பெண் கல்விக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர். இஸ்லாமியப் பெண்கள் பள்ளிக்குச் சென்றால் ஒழுக்கத்தை மீறுவார்கள் எனும் அச்சம் மதவாதிகளிடம் நிலவுகிறது. மீன்காரர்கள் பொருளாதாரக் குறைவால் நசிவடைகின்றனர். மீன்காரப் பெண்களிடம் கல்விஅறிவு இன்மையை,

**“ஒரு குழந்தை வளர்கின்ற பருவத்தில் மருத்துவ ரீதியான தேவைகள் அறிந்து, அதைக் காலத்தில் தரத் தவறினார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அறியாமைதான் அவர்களுக்குப் பரம்பரைச் சொத்தாயிற்றே. எந்த மீங்காரிதன் பிள் ளைக்குச் சொட்டு மருந்து கொடுத்திருக்கிறாள்”. (கீரனூர் ஜாகிர்ராஜா,2013, ப.35)**

கீரனூர் ஜாகிர்ராஜா இவ்வாறு மீன்காரப்பெண்களின் விழிப்புணர்வின்மையை ‘மீன்குகைவாசிகள்’ நாவலில் எடுத்துக்காட்டுகிறார். நசீருக்குக் குறிப்பிட்ட காலத்தில் சொட்டு மருந்து கொடுக்கத் தவறியதால் அவன் கால்கள் இரண்டும் செயல் இழந்தன. மீன்காரப்பெண்கள் சொட்டுமருந்து தரத் தெரியாமல் அறியாமையில் கிடக்கின்றனர்.குரான் என்பது எல்லா காலமாற்றங்களுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்புடையதாக உள்ளது. ஆகையால் குரானின் கருத்துக்கள் மாற்றத்திற்கானவை அல்ல என்று கருதுகின்றார்கள். இதனை,

**“இசுலாம் ஒரு உலகமதம், எல்லா மக்களுக்கும் காலங்களுக்கும் நிலைமைகளுக்கும் பொருத்தமான மதம் என முசுலீம்கள் அனைவரும் கொண்டுள்ள அடிப்படை முற்கருத்தே இற்குக் காரணமாகும்.” (ஆனந்த் தெல்தும்ப்டே, 2003, ப.86)**

என்று ஆனந்த் தெல்தும்ப்டே குறிப்பிடுகிறார். இஸ்லாமிய முற்போக்குச் சிந்தனையாளர்கள் இஸ்லாம் உலகமதம். இது அனைவருக்குமான மதம் என்று கூறுகின்றனர். இது உலகில் வாழும் பலதரப்பட்ட மனிதர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைத் தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஆற்றல் சமயசட்டங்களுக்கு உரியது என்றும் குரான் கூறுகிறது. இவ்வாறு மதவாதிகள் குரானையும் சட்டத்தையும் கூறி மக்களிடம் மதநம்பிக்கையைத் திணிக்கிறார்கள். இத்தகைய சட்டங்கள் இஸ்லாமியர்களின் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கின்றன. பழமைவாதிகள் இஸ்லாமியர்களின் சட்டக்கல்வியும் இறையியல் கல்வியும் ஒன்றுதான் எனக் குழப்பமான சூழலை உருவாக்குகிறார்கள்.

இஸ்லாமிய மார்க்கவாதிகள் இஸ்லாமியச் சட்டத்தையும் இறையியற்கல்வியையும் பிணைத்து ஒரு புதிய பொருளைக் கொள்கின்றனர். இங்கு,

“பொருளாதாரம் அரசியல் ஆகிய இரண்டும் தனித்தனியாகப் பிரியாமல் இருப்பது-அர்த்தம்” (ராஜ்கௌதமன், 2008, ப.25)

எனும் ராஜ்கௌதமனின் கருத்து ஒப்பிடத்தக்கது. இஸ்லாமியர்களிடத்தில் இறையியல் கல்வியைவிட சட்டமே பிரதான இடத்தைப் பெறுகிறது. ஆகையால் இஸ்லாமியர்களுக்கு சட்டமே அடிநாதமாக செயல்படுகிறது அதேபோல்சட்டம் எப்படி உள்ளதோ அவ்வாறே நடக்க வேண்டும். இஸ்லாம் சட்டவிதிகளை மீறுபவர்கள் நரகத்திற்குச் செல்வர் என்று தொடர்ந்து அச்சுறுத்தப் படுகின்றனர்.

குழந்தைகளுக்குப் புத்தகம், ஏடுகள் வாங்க முடியாதநிலை காணப்படுகிறது. குழந்தைகள் நன்றாகப் படித்தாலும் வீட்டின் வறுமைநிலையால் பள்ளிக்குச் செல்லமுடியாத சூழல் ஏற்படுவதை, கீரனூர் ஜாகிர்ராஜா ‘பாரம்’ எனும் சிறுகதையில் எடுத்துக் காட்டுகிறார். குடும்ப வறுமை, குழந்தைகளின் பசி ஆகியவை கல்விக்குத் தடையாக நிற்கின்றன. கல்வியைத் தொடரமுடியாமல் மனஉளைச்சலுக்கு உள்ளாகின்றனர். இஸ்லாம் சமூகத்தில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லையெனப் பெற்றோர்கள் கருதுகின்றனர். ஆகையால் பெண் கல்விக்கு இதுவும் ஒருவகையில் தடை. இஸ்லாமியப் பெண்கள் தங்கள் குடும்பமும் சமூகமும் மட்டுமே நமக்குப் பாதுகாப்பு என்று நம்புகின்றனர்.

இஸ்லாமியர்களின் பிரச்சினைகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. அவர்களின் இடஒதுக்கீடு பற்றிப் பரிந்துரை செய்யவில்லை எனப் பலர் விமர்சனங்களைத் தெரிவிக்கின்றனர். ஆக, மற்ற சமூகங்களுக்குக் கொடுத்த இடஒதுக்கீட்டைப் போல இஸ்லாமியர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று அரசுக்கு சச்சார் பரிந்துரை செய்யக் கோரிக்கை வைக்கிறது.இஸ்லாமியர்கள் நவீனக் கல்வியின் மூலம் இறையியல் பலனைப் பெறமுடியாது என்ற கருத்துநிலையை மார்க்கவாதிகள் உருவாக்கினர். மாறாக அவர்கள்

மதறஸாக் கல்விக்குத் துணைநின்றனர். இஸ்லாமியர்களுக்கும் பள்ளிக்கல்விக்கும் உள்ள தொடர்பை ஓரிடத்தில் விளக்கும்போது,

**"கல்விமூலம் முறையான வேலைவாய்பை பெறலாம் என்கிற நம்பிக்கையின்மையே முஸ்லிம்கள் மத்தியில் கல்வியும் கல்விச்சாதனைகளும் குறைவாக இருப்பது. ஆரம்பக்கல்வியைத் தாண்டிய இடை மற்றும் மேல்நிலைக்கல்விக்கூடங்கள் முஸ்லிம் பகுதிகளில் மிகக் குறைவாக உள்ளன." (அ.மார்க்ஸ், 2007, ப.45)**

அ.மார்க்ஸ் இவ்வாறு சுட்டிக்காட்டுகிறார். சமகாலத்தில் இடைநிலை மேல்நிலைக் கல்வியை நிறைவு செய்ய முடியாத சூழல் அடித்தள இஸ்லாமியர்களுக்கு உள்ளது. இஸ்லாமியர்களின் குழந்தைகள் 'தீவிரவாதிகளின் குழந்தைகள்' என்று பள்ளியில் ஒதுக்கப்படுகின்றனர். இந்திய தமிழக ஊடகங்கள் இதற்கேற்றவாறு இஸ்லாமியர்களை 'தீவிரவாதிகளின் குழந்தைகள்' என சித்திரிக்கின்றன. ஆகவே கல்விக்கூடங்களில் மாணவர்களுக்கிடையே பிரிவினைவாதம் வளர்கிறது. வங்கிகளில் இஸ்லாமியர்களுக்குக் கல்விக்கடன் வழங்குவதில்லை. இஸ்லாமியர்கள் இந்து வணிகர்களிடம் போட்டிபோட முடியவில்லை. இதன் விளைவாக மற்ற சமூகத்தினரைச் சார்ந்திருக்க வேண்டிய சூழலும் ஏற்படுகின்றது. இந்நிலையை,

**"மரபுவழித் தொழில்களிலிருந்து இடம் பெயர்க்கப்படும் நிலை முஸ்லிம்களின் வாழ்வாதாரங்களைப் பறிப்பதாக உள்ளது. முஸ்லிம்களுக்குக் கடன் உதவி, சந்தையில் இடம் ஆகியன மிகமிக முக்கியமாக உள்ளது. முறையான வேலைகளில்லாமல் ஒப்பந்தப் பணிகளிலேயே முஸ்லிம் பெண்கள் உள்ளதால் இன்னும் மேலான பணிச் சூழலுக்காக முதலாளிகளுடன் பேரம் பேசுகிற வாய்ப்பு அவர்களுக்கு இல்லாதுள்ளது. முஸ்லிம்கள் நிறைந்துள்ள பகுதிகளை, பல வங்கிகள் "எதிர் மறையான அல்லது சிவப்புப் பகுதிகள்" என அறிவித்துக்கடன் உதவிகளைச் செய்ய மறுக்கின்றன." (மேலது, ப.46)**

இவ்வாறு ஆ.மார்க்ஸ் குறிப்பிடுகிறார். இஸ்லாம் சமூகம் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்படுகிறது. பிற சமூத்துடன் ஒத்துப்போக முடியாமல் அந்நியமாதலுக்கு ஆளாகின்றனர். கல்விக்கூடங்களில் ஆசிரியர்கள் சாதி பார்க்கிறார்கள். மின்காரர்கள் வறுமையை மீறித் தமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பினால் ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்தவர்கள் என்று அப்பிள்ளைகள் ஒதுக்கிவைக்கப்படுகிறார்கள். கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களே இவ்வாறான செயலைச்செய்கின்றனர். இதனை,

**"நாலு படிப்பு படிச்சதோட திமிர்தான. தகுதியை மீறி தாண்டவைச்சிருக்கு என்பதாக நான்கு அறிவாளிகள் பள்ளிவாசலில் கதைப்பார்கள். மீன்விற்கப் போகாமல் படிக்கலாம் என்று பெரிய மனதுடன் பள்ளிக்கூடம் போகும் ஒன்றிரண்டு தெருப்பிள்ளைகளையும் ஓரங்கட்டி ஒதுக்கி வைத்திருப்பார்கள் நல்லாச்சான்கள்." (கீரனூர் ஜாகிர்ராஜா, 2013, ப.35)**

என்று கீரனூர் ஜாகிர்ராஜா 'மீன்காரத்தெரு' நாவலில் பதிவு செய்கிறார். மீன்காரப்பெண்கள் பள்ளிக்குச் சென்றால் அவர்களையும் ஒதுக்கி வைக்கின்றனர். இதுபோன்ற நிலை, தமிழகத்தில் மட்டுமல்ல வடமாநிலங்களில் காணப்படுகிறது. 'நற்குணத்தையும் தீய குணத்தையும் கடவுள் ஆன்மாக்களில் எழுதி வைத்துள்ளான்' என்று இறையியலாளர்கள் கருதுகின்றனர். ஆனால் ஒடுக்கப்பட்டவர்களான அஜ்லபுகளுக்குக் கல்வி வழங்குவது அறிவீனம் என வடமாநிலத்தவர் உறுதியாக நம்புகின்றனர். இந்நிலையை,

**"அஜ்லபுகளுக்குக் கல்வி வழங்குவது என்பது விலை உயர்ந்த ரத்தினக்கற்களை நாய்களின் முன்னே பரப்பி வைப்பது போலவும் தங்க ஆபரணங்களைப் பன்றிகள், கரடிகளின் கழுத்தில் அணிவிப்பது போலவும் என உவமானம் செய்து தொழுகை, நோன்பு, ஹஜ்ஜீக்கு அப்பால் எந்த அறிவையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது எனவும் எழுதினார்." (ஹெச்.ஜி.ரசூல், 2010, ப.31)**

என்று ஹெச்.ஜி.ரசூல் எடுத்துக்காட்டியுள்ளார். இச்சான்றை மறுவாசிப்பிற்கு உட்படுத்தினால் இரத்தினக்கற்களை நாய்களும் தங்கத்தைப் பன்றிகளும் கரடிகளும் அபகரிக்க எண்ணாது. மாறாக இவ்வுயர்ந்த பொருட்களை அனுபவித்தவர்களால்தான் இத்தகைய உவமையைச் சிந்திக்கவே முடியும். அதாவது நவீனக் கல்வியைத் தமது வாழ்வாதாரத்திற்குப் பயன்படுத்திப் பழகியவர்கள் தமக்குப் போட்டியாளர்கள் இல்லாமல் செய்வதற்காக இத்தகைய வழிகளில் பயணிக்கின்றனர். எனினும் யதார்த்த உலகின் மையநீரோட்டப் புரிதலுக்கு வந்து சேர முடியும். வடமாநிலங்களில் இஸ்லாமியர்களுக்குள் தீண்டாமை மிகுதி. அர்ஷால்களுக்கு எவ்வித உரிமையும் அளிக்கவில்லை. அர்ஷால்கள் மனிதர்களாக மதிக்கப்படுவதில்லை. வடமாநிலங்களில் கீழ்நிலைப் பிறப்பாளர்கள் என கருதப்படுபவர்களுக்குக் கல்வி அளித்தது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தக் கல்வியாளர்கள் தண்டிக்கப்படுவர். கல்வி உரிமை அஷ்ரப்களுக்கு(உயர்ந்தவர்கள்) மட்டுமே உரியது. அஷ்ரப்கள் மதிப்புமிக்க தொழில்களைச் செய்தல், ஆட்சி செய்தல், கல்வி

கற்றுக்கொடுத்தல், சமய உண்மைகளைப் பிரச்சாரம் செய்தல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டும். தமிழக அரசு முஸ்லிம்களை மிகவும் பின்தங்கியவர்கள் எனக் கண்டறிந்து அறிவித்து இடஒதுக்கீட்டை அளிக்கவேண்டும் என்று கூறுவதை,

"தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஒசாக்கள், மீன்காரர்கள், விவசாயக்குடிகள், பாவோடிகள், பக்கிரிஷாக்கள், நகர்ப்புறசேரி முஸ்லிம்கள் உள்ளிட்ட அடித்தள முஸ்லிம் தலித்துகளையும் அடையாள நெருக்கடி மற்றும் வாழ்வியல் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் தலித்துகளிலிருந்து மதம் மாறிய தலித் முஸ்லிம்களையும் அடையாளம் கண்டு தலித் முஸ்லிம்களாக அறிவித்துக் கல்வி, வேலைவாய்ப்பில் தனி இடஒதுக்கீட்டை வழங்கவேண்டும். இதுவே தமிழக முஸ்லிம் சமுதாயத்திற்கு உள்ளும் சமச்சீர் வளர்ச்சியை உருவாக்க வழிவகுக்கும்." (மேலது, ப.11)

என்று ஹெச்.ஜி.ரசூல் அடித்தள இஸ்லாமியர்களுக்கு எவ்வித உரிமையும் அளிக்கப்படாதைக் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

தமிழ் இஸ்லாமியர்கள் சமகாலத்திலும் நிறைவான கல்வியைப் பெறவில்லை. இஸ்லாமியப் பெண்களால் உயர்கல்வியைக் கற்க முடியவில்லை. இதற்குப் பொருளாதாரம் ஒருகாரணமாக உள்ளது. இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு குறைவாக இருப்பதும் ஒரு காரணியாகும். இதைக் கருத்தில் கொண்டுதான் 'சச்சார் குழு அறிக்கை' இஸ்லாமியர்களுக்கு மிகுதியான இடஒதுக்கீட்டை அளிக்கப் பரிந்துரைத்துள்ளது. ஆனாலும் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாமியர்களின் பங்கு வெற்றிடமே.